# அந்தணர் அல்லாதார் அர்ச்சகர் ஆகலாமா?

ஸ்ரீவைஷ்ணவச் சூடராழி **டி.ஏ.ஜோசப்**, பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Web: http//dajoseph.50megs.com Email: deyeje@yahoo.com

உலகத்தில் வேறு எந்த நாட்டுக்கும் இல்லாத சாபக் கேடு இந்தியாவுக்கு உண்டு. அது என்னவென்றால் இந்த நாடு யார் வம்புக்கும் போகாமல் சும்மா இருந்தால் மற்ற நாட்டுக்காரர்கள் வீண் வம்புக்கு வருவார்கள்; அடிப்பார்கள், அடிமைப் படுத்துவார்கள், அரசாள்வார்கள், அவர்களுடைய கொள்கைகளை இங்கே திணிப்பார்கள். வெள்ளையன் வந்தான். மனிதர் அனைவரும் சமம் என்றான். ஆனால் அவனுடைய நாட்டில் கறுப்பாய் இருக்கிற காரணத்துக்காக நீக்ரோவை உயிரோடு கொளுத்துவான். அதை யாரும் ஏன் என்று கேட்கக்கூடாது. முஸல்மான் வந்தான். மனிதரில் வேறுபாடே இல்லை என்றான். ஆனால் ஷியா வகுப்பென்றும் சன்னி பிரிவு என்றும் தனக்குள் அடித்துக் கொள்வான். அதையாரும் ஏன் என்று கேட்கக் கூடாது.

மனிதர் எல்லோரும் சமம் என்பது எவ்வளவு தூரம் நிஜம்? காதால் கேட்பதற்கு இது எவ்வளவு திவ்யமாக இருக்கிறது! ஆனால் இது நடைமுறையைப் பிரதிபலிக் கும் உண்மையா? பொறுமையோடு சிந்திக்க வேண்டும்! ஊரைக் கொள்ளையடித்து வாழ்பவனும், ஊருக்கு உதவும் கொடை வள்ளலும் சமமா? கணவனே கண் கண்ட தெய்வம் என்று வாழும் கற்புக்கரசியும், நாளுக்கொரு ஆடவனோடு படுத்துப் புரளும் நடத்தைக் கெட்டவளும் சமமா? கல்வி புகட்டும் ஆசிரியரும், தலையில் வெறுமையும், அறியாமையும் தவிர வேறொன்றும் இல்லாத மாணவனும் சமமா? மனித குலத்தின் முன்னேற்றத்திற்காக பாடுபட்டு புதுப்புது கண்டுபிடிப்புக்களை வழங்கும் விஞ்ஞானியும், அதன் பலனை அனுபவிக்கும் சுகபோகியும் சமமா? உழைத்துப் பாடுபட்டு பொருள் தேடி பணம் சேர்த்தவனும், சோம்பலாய்ப் பொழுதை வீணடித்து ஊர் சுற்றித் திரியும் ஊதாரியும் சமமா?

சமத்துவம் என்ற சொல்லுக்குப் பொருள் தான் என்ன? மனிதனுக்குப் பசி, தாகம்,நோய், மான அவமானம் முதலிய இன்பதுன்பங்கள் மட்டும் தான் எல்லோருக்கும் சமம். ஆனால் தகுதி அடிப்படையில் பார்க்கும்போது மனிதனுக்கு மனிதன் வேறுபடுகிறான். ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளிலேயே உலகுக்கு உதவும் உத்தமனாக ஒருவனும், சமுதாயத்தை உறிஞ்சி வாழும் சழக்கனாக ஒருவனும் உருவாவதை நாம் வீடுகளில் பார்ப்பதில்லையா? தகுதி என்னும் தரம் உள்ளவனையும், தரங்கெட்ட குற்றவாளிகளையும், சமம் என்று எப்படிச் சொல்லமுடியும்? கொலைகாரர்களையும், குற்றவாளிகளையும் சிறைச்சாலையில் தனிமை படுத்தி திருத்துகிறோமே அதிலிருந்தே மனிதன் தரத்தால் மனநலத்தால் பலவகைப்பட்டவன் என்று புரியவில்லையா? நல்ல தகுதிகள் உள்ளவனுக்கு அவை இல்லாதவனை விட அதிக மதிப்பும் ஊக்கமும் தந்தால் தான் அவன் அந்தப் பாதையில் முன்னேறுவான். சமுதாயத்துக்கு நன்மை செய்யும் ஒரு அறிவாளியையும், ஊருக்குத் தீங்கு இழைக்கும் அயோக்கியனையும் ஒன்று போல் நடத்தினால் அந்த நல்லவன் நல்லவனாய் இருப்பதை விட தீயவனாய் மாறுவதே சிறந்தது என்று நினைக்க மாட்டானா? அரசு அலுவலகங்களில் கூட

சம்பளவிகிதம் ஆளுக்கு ஆள் வேறுபடுகிறதே. அது ஏன்? எல்லோரும் சமம் என்று எல்லோருக்கும் ப்யூனுக்குத் தர வேண்டிய சம்பளத்தை கொடுத்தால் என்ன?

நம் நாட்டில் நம் சமுதாயம் இப்படித்தான் தன்மையின் அடிப்படையில் நான்கைந்து பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது. அதில் ஒரு பிரிவு தான் அந்தணன் பிரிவு. அந்தணன் என்பவன் யார்? அவனுக்கு இந்த நாடு விதித்திருந்த சட்டங்கள் என்ன? வழங்கி இருந்த உரிமைகள் என்ன? என்று பொறுமையாகச் சிந்திக்க வேண்டும். எல்லா ஊர்களிலும் கோயிலைச் சுற்றி குடியிருந்தார்கள். கோயிலுக்கு அடுத்த பிராகாரத்தில் இவர்கள் குடியிருந்தார்கள். இல்லை இல்லை குடியமர்த்தப் பட்டார்கள். ஏன் அப்படி? பணம் சம்பாதிப்பதும், அதன் பலனைத் துய்ப்பதுமான வைசியர் பழக்கம் இவர்களுக்கு அனுமதிக்கப்படவில்லை. கத்தி சுழற்றுவதும், அசைவம் சாப்பிடுவதும், நாடு பிடிப்பதும், பலதார மணம் புரிவதும், ஆட்சியை நடத்துவதுமான க்ஷத்திரிய சுகபோகமும் இவர்களுக்கு அனுமதிக்கப் படவில்லை. ஆசார அனுஷ்டானங்களைப் பற்றிக் கவலை இல்லாமல் வேளாண்மை, சித்திரம், சிற்பம், மாந்தீரிகம், ஜோதிடம் என்று பல தொழில் பார்க்கும் நான்காம் வருணத்தவனின் சுதந்திரமும் அவர்களுக்கு அனுமதிக்கப்படவில்லை.

பிராம்மணன் என்ற உடன், அரசியல் முதல் சினிமா வரை உலகியல் போகத்தை ஒரு கை பார்த்துவிடலாம் என்று வாழும் இன்றைய உலகியல் பிராம்மணனைப் பற்றி நான் பேசுவதாக நினைக்காதீர்கள். இதெல்லாம் வெள்ளையனும், துலுக்கனும் இந்த நாட்டுக்கு வந்தேறிகளாக வந்து இந்த மண்ணின் மைந்தர்களை மாசுபடுத்தியதனால் கடந்த 300 ஆண்டுகளுக்குள் ஏற்பட்ட கலாச்சார சீரழிவு. தலையிலே சிகையும், திறந்த மார்பிலே யஜ்ஞோபவீதமும், இடையிலே பஞ்சகச்சமும் என்ற தோற்றத்தோடு தாவர உணவு மட்டுமே உண்டு மார்கழி மாதக் கடும்பனியிலும் திறந்த மேனியோடு காலை நான்கு மணிக்கெல்லாம் எழுந்து மந்திரங்களையும் பாசுரங்களையும் சேவித்து காற்றில்லாத கர்ப்ப க்ரஹத்தில் அனல் மேல் புழுபோல் வேர்த்து, வடிந்து கோயில் நைவேத்யம் ஒன்றே உணவாக 'கிடைத்தால் உணவு இல்லையேல் பட்டினி' என்ற கொள்கையில் உஞ்ச விருத்தி என்ற பிச்சையெடுத்து வயிற்றைக் கழுவி "மற்ற வருணத்தான் பொய் சொன்னால் மன்னிப்பு உண்டு, பிராம்மணன் பொய்சொன்னால் அது பெரும் பாவம்" என்பதும் "ஜீவஹிம்சை பிராம்மணனுக்கு பெரும் பாவம்" என்பதுமான கொள்கைகளுக்குக் கட்டுப்பட்டு அமாவாசை, பௌர்ணமி, தர்ப்பணம், சிரார்த்தம், திதி என்று பஞ்சாங்கத்தைப் பார்த்து உபவாசம் இருக்கும் உத்தம அந்தணர்களைத்தான் நான் பிராம்மணன் என்று குறிப்பிடுகிறேன். அப்படிப்பட்டவர்கள் இன்றும் நிறைய இருக்கிறார்கள்.

இந்த பிராம்மண வருணத்தார் கோயில் அர்ச்சகர்களாக இருக்கிறார்கள் என்றுதான் உலகம் அறியுமே தவிர, பிராம்மணராய்ப் பிறந்த எல்லோரும் அர்ச்சகராகும் உரிமை பெற்றவர்களா இல்லையா என்று பலருக்குத் தெரியாது – இன்று சட்டம் இயற்றுவர்கள் உட்பட.

ஆண்டவன் திருமேனியைத் தீண்டும் தகுதி பெற்ற அந்த பிராம்மணர்களின் உரிமை எல்லா பிராம்மணர்களுக்கும் உண்டா? இல்லை! ஜீயர்களுக்கு உண்டா? இல்லை! மடாதிபதிகளுக்கு உண்டா? இல்லை! அரையர்களுக்கு உண்டா? இல்லை! அது ஏன்? அதன் பிண்ணனி என்ன? யாராவது சிந்தித்தார்களா? இல்லை! சிந்திக்க நேரம் இல்லாமல் இல்லை. சிந்திக்க மனம் இல்லை.அதை முறைப்படி சிந்தித்தால் அந்தணர் அல்லாதார் அர்ச்சகர் ஆகலாமா என்ற கேள்விக்கு ஒரு நடுநிலைமையான விடை கிடைக்கும். அது என்ன? எப்படி? என்பதை அடுத்த மாதம் எழுதுகிறேன்.